# உருமு தனலெட்சுமி கல்வி நிறுவனங்கள்

## 64 ஆவது நிறுவனர் நினைவுநாள் செய்தி மடல்

### சிறப்பு இதழ் – நவம்பர் 2017





உழைப்பே உத்தம தொழுகை

“மனிதன் என்பவன் தெய்வமாகலாம்! வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்! வாழைபோலத் தன்னைத் தந்து தியாகியாகலாம்! மனம்... மனம்... அது கோயிலாகலாம்!” எனும் கண்ணதாசன் பாடலுக்குச் சான்றாய் விளங்கும் இம்மண்ணின் மைந்தர்களில் ஒருவரே நம் கல்லூரி நிறுவனர் தெய்வத்திரு.உருமு சேஷாசலம் செட்டியார் அவர்கள். உருமு சேஷாசலம் செட்டியார் ஆதரவற்றோர் நிலையம், உருமு தனலெட்சுமி தொடக்கப் பள்ளி, உருமு தனலெட்சுமி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி மற்றும் உருமு தனலெட்சுமி கல்லூரி எனப் பல சிறந்த கல்வி நிறுவனங்களையும், அற அமைப்புகளையும் கொண்டு வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும் உருமு சேஷாசலம் செட்டியார் அறக்கட்டளையின் நிறுவனர் **உருமு சேஷாசலம் செட்டியார்** அவர்களின் **64 ஆவது நினைவு நாள்** 17.11.2017 அன்று திருச்சி உருமு தனலெட்சுமி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. தோன்றிய காலந்தொட்டு இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து சக மனிதர்களின் உள்ளங்களில் தடம் பதித்துச்சென்ற அவரது நினைவுகளைப் பலரும் போற்றிய இச்சிறப்புக் கூட்டத்தின் பதிவுகளைச் சுமந்து வருகிறது இந்தச்செய்தி மடல்! – கல்லூரி செய்திக்குழு, பள்ளி செய்திக்குழு.



நிறுவனர் நினைவுநாள் விழாவிற்கு வருகைதரும் உருமு சேஷாசலம் அறக்கட்டளையின் தலைவர், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள்.




அமர்ந்திருப்போர் முன்வரிசை (இடமிருந்து வலது): நாவுக்கரசர் முனைவர் சோ. சத்தியசீலன், திரு. கல்கி ராமகிருஷ்ணன், செயலர் - உருமு தனலட்சுமி கல்லூரி, தாளாளர் - உருமு தனலட்சுமி வித்யாலயா தொடக்கப்பள்ளி மற்றும் மேனிலைப்பள்ளி, திருமதி பத்மா ராமகிருஷ்ணன், தலைவர் - உருமு சேஷாசலம் செட்டியார் அறக்கட்டளை, மருத்துவர் மோதி. கிருபாசங்கர், கல்வி ஆலோசகர் மற்றும் உறுப்பினர் - உருமு சேஷாசலம் செட்டியார் அறக்கட்டளை, முனைவர் பொன். சக்திவேல், முதல்வர் - உருமு தனலட்சுமி கல்லூரி, திரு. விசுவநாதன், உறுப்பினர் - உருமு சேஷாசலம் செட்டியார் அறக்கட்டளை. பின்வரிசை: திருமதி ரமாதேவி, தலைமையாசிரியர் - உருமு தனலட்சுமி தொடக்கப்பள்ளி, திரு. K. சகாயராஜ், தலைமையாசிரியர் - உருமு தனலட்சுமி மேனிலைப்பள்ளி.




விழாவுக்கான வரவேற்புரை நல்குகிறார் கல்லூரி முதல்வர்.




கல்லூரி செயலர் மற்றும் பள்ளிகளின் தாளாளர் திரு. கல்கி ராமகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டுகின்றார் கல்லூரி முதல்வர்.




மருத்துவர் மோதி கிருபாசங்கர் அவர்களைப் பள்ளியின் தலைமையாசிரியர் பாராட்டுகின்றார்.




நிறுவனர் நாள் விழாவின் தலைவர் திருமதி பத்மா ராமகிருஷ்ணன் அவர்களைக் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் கிறிஸ்டி செல்வராணி மகிழ்ந்து அன்பினை வெளிப்படுத்திப் பாராட்டுகின்றார்.



நாவுக்கரசர் முனைவர் சோ. சத்தியசீலன் அவர்களைப் பள்ளியின் மேனாள் தமிழாசிரியர் திரு. மு. வைத்தியநாதன் பாராட்டுகின்றார். உடன் கல்லூரி செயலர்.



நிறுவனர் நாள் விழாவுக்கான தலைமையுரையாற்றுகின்றார் அறக்கட்டளைத் தலைவர் திருமதி பத்மா ராமகிருஷ்ணன்.



நிறுவனர் குறித்த இனிய நினைவுகளைப் பதிவு செய்கிறார் கல்லூரி விளையாட்டுத்துறைப் பேராசிரியர் முனைவர் N.S. சிவக்குமார்.



பள்ளி ஆசிரியர் திரு. A.N. தனசேகரன் மற்றும் திருமதி S. புவனேஸ்வரி ஆகியோர் நிறுவனரின் மேன்மையான தொண்டினையும் சிறப்பினையும் கூறுகின்றனர்.



கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ. வீரமணி நிறுவனர் குறித்த எண்ணங்களைப் போற்றிப் புகழ்ந்துரைக்கிறார்.




மருத்துவர் மோதி கிருபாசங்கர் அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்.



நாவுக்கரசர் கலைமாமணி முனைவர் சோ. சத்தியசீலன் அவர்கள் நிறுவனர் செயல்களை வியந்து வாழ்த்துரை வழங்குகின்றார்.



உருமு சேஷாசலம் செட்டியார் அறக்கட்டளையின் பொருளாளர் திரு. G.N. சீனிவாசன் அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றார் கல்லூரி முதல்வர்.



நிகழ்வில் பங்கேற்ற பார்வையாளர்கள்.




தூய்மையைப் போற்றிப் பாதுகாக்கும் வித்தகர்களுக்குப் பாராட்டு.




பணிநிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கானப் பாராட்டு.



பள்ளியின் தலைமையாசிரியர் அவர்களின் நன்றியுரை.

**ஆசிரியர் குழு**

முனைவர் N. கண்ணன்
முனைவர் தே. இந்திரகுமாரி
முனைவர் P. செந்தில்
முனைவர் பிரதீபா
திரு. சுவாமிநாதன்
திரு. கார்த்திக் சரவணன்
திரு. ஆசைத்தம்பி
முனைவர் கு. வடிவேல்முருகன்

You could follow us on
udcnewsletters@gmail.com